இருப்பதால் துணை இயக்குநர் அளவில் தனித்தனியாக கவனிக்கப் பட்டு ஆனால் இயக்குநர் ஒருவர் மேற்பார்வையில் நிர்வகிக்கும் அளவிற்கு இருக்கிறது. ஆரம்பக் கல்விக்கு தனி இயக்குநராகப் பிரித்து தொழில் கல்விக்கு இருப்பதுபோல் வைப்பது கடின மானது. ஒரு இயக்குநரின் கீழ் தனித்தனியாக இணை இயக்கு நர்கள் பணியாற்றி வருகிறார்கள்.

செட்டியார் மடம் உயர்தொடக்கப்பள்ளிக் கட்டடம்.

* 147 வினா—திரு. ஏ. பாலையா : மாண்புமிகு கல்வி-சுற்றுலாத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டம், தக்கலை கல்வி மாவட்டத்தைச் சேர்ந்த செட்டியார் மடம் உயர் தொடக்கப் பள்ளிக் கட்டடம் மிகவும் பழுதடைந்த நிலையில் உள்ளது என்பதை அரசு அறியுமா?

(இ) ஆமெனில் புதிதாக கட்டடம் கட்டுவதற்கு நடவடிக்கை ஏதேனும் மேற்கொள்ளப்பட்டுள்ளதா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) ஆம்.

(இ) பழுதுபட்ட பகுதியை சிறப்புப்பணி பார்க்க நாகர்கோவில் பொதுப்பணித்துறை நிர்வாகப் பொறியாளர் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளார்.

திரு. ஏ. பாலையா : செட்டியார் மடம் உயர்தொடக்கப் பள்ளிக் கட்டடம் மோசமான நிலையில், மேற்கூரை பழுதுபட்டு, அனைத்தும் அழிபட்டு மிகவும் அபாயகரமான நிலையில் இருப்பதாலும், மதிய உணவுக்கு வேண்டிய பொருள்களை அந்தப் பள்ளியில் வைப்பதற்கு பாதுகாப்பான இடவசதி இல்லாத தாலும் அந்தப் பள்ளிக் கட்டடத்தை உடனடியாகக் கட்டி முடித்துக்கொடுக்க அரசாங்கம் அனுமதி அளிக்குமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: திருநெல்வேலியில் உள்ள நிர்வாகப் பொறியாளருக்கு இதைப் பற்றி உடனடியாகக் கவனிக்குமாறு மாவட்டக் கல்வி அதிகாரி வற்புறுத்தி எழுதி யிருக்கிறார்கள். நிர்வாகப் பொறியாளர் விரைவில் அதுபற்றி நடவடிக்கைகள் எடுப்பதாகவும் கூறி இருக்கிறார்கள்.

1975 அக்டோபர் 31]

திரு. ஜே. ஜேம்ஸ்: கன்னியாகுமரி ஜில்லாவில் அதிகமான பள்ளிக்கூடங்களுக்கு மேல் கூரை இல்லாமல் மழை காலங்களில் வகுப்புகளை நடத்த முடியாமல் ஆசிரியர்கள் மாணவர்களை விட்டுவிடுகிருர்கள். ஆகவே, அந்த மாவட்டத்திலுள்ள அப்படிப்பட்ட பள்ளிக்கூடங்கள் அனைத்துக்கும் அதிக கால தாமதம் இல்லாமல் பலமான கட்டடங்களை அமைத்துக் கொடுக்க அரசாங்கம் ஆவன செய்யுமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: அந்த மாவட்டத்திற்கு ஒதுக்கப்படுகிற நிதி அடிப்படையில் ஓரளவு இந்தப் பணிகள் செய்யப்பட்டு வருகின்றன. அதற்கு என்று கூடுதலான நிதி ஒதுக்கியும் போதுமான அளவிற்கு இல்லை என்ற நிலைமை இருக்கிறது. அங்குள்ள கட்டடக் குழுவினரும் கல்வித் துறையின் சார்பாகவும் ஓரளவு உதவி செய்வதன் மூலம், முதலில் பழுதுபட்ட கட்டடங்களின் கூரைகள் கவனிக்கப்பட வேண்டும் என்று ஆணை பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. அதுபற்றி கல்வித் துறை அதிகாரிகள் தக்க நடவடிக்கைகளை மேற்கொண்டிருக் கிருர்கள்.

Children's Museum

* 148Q.— THIRU N. K. PALANISAMY: Will the Hon. the Minister for Education and Tourism be pleased to state—

(a) whether there is a proposal to establish a separate Museum for the development of children's talents in Arts; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: (அ) ஆம்.

(இ) சிறுவர் காட்சியகமும் பொம்மைகள் காட்சியகமும் அடங்கிய "ஜவஹர்லால் நேரு பாலபவனம்" நிறுவுவதற்கு அரசு ஆணை வழங்கப்பட்டுள்ளது. இதன் பொருட்டு ஜவர்ஹர்லால் நேரு நினைவு நிதியில் இருந்து ரூ. 15.72 இலட்சம் வழங்கப் பட்டது. குழந்தைகள் காட்சியகமும் பொம்மைகள் காட்சியகமும் அடங்கிய பாலபவனின் நிர்வாகக் கமிட்டி ஒன்று அமைப்பதற்கு அரசாணை ஒன்று பிறப்பிக்கப்பட்டுள்ளது. பாலபவனமானது மற்றவைகளுடன் கீழ்க்கண்ட செயல்களும் உடையதாகும்.

TRUTH ALONE TRIUMPHS